I Additional District Court, Thoothukudi.

O.S.No.239/2024 நாள் : 23.02.2026

வா.சா.1– திரு.மதன்ஸ்ரீராம்.

குறுக்கு விசாரணை :–

என் வயது 31. நான் வியாபாரம் செய்கிறேன். கோவில்பட்டியில் குடியிருக்கிறேன். தாவா சொத்துக்கள் மேலஈரால் கிராமத்தில் உள்ளன. 1ம் தபசிலில் விவசாயம் நிலமும், 2ம் தபசிலில் மூன்று நத்தம் இடங்களும் காட்டியுள்ளேன். தாவா சொத்தை கடந்த வாரம்கூட பார்த்தேன். 2ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தில் மாடி கட்டிடம் உள்ளது. 2ம் தபசில் 2, 3 அயிட்ட சொத்துக்கள் காலியிடமாக உள்ளன. 2ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். வீடு கட்டடப்பட்டு ஐந்து ஆண்டுகள் இருக்கும். அதற்கு முன்பாக அந்த சொத்து எப்படி இருந்தது என்று எனக்குத் தெரியாது. 2ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தில் வீடு இருப்பதாக வழக்குரையில் காட்டவில்லை. 2, 3 அயிட்ட சொத்துக்களில் ஆஸ்பெட்டாஸ் ஷெட் இருப்பதாக வழக்குரையில் தவறாக காட்டியுள்ளோம் என்றால் 2ம் தபசில் சொத்துக்களை நான் பார்த்ததில்லை. 2ம் தபசில் சொத்துக்களை பார்த்து 2 ஆண்டுகள் இருக்கும். வழக்கு தாக்கல் செய்யும்போது பார்த்தேன். 2ம் தபசில் சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் உள்ளன என்றால் சரியல்ல. எங்கள் சுவாதீனத்தில் உள்ளது. 2ம் அயிட்ட சொத்துக்களுக்கு எங்கள் பெயரிலோ, எங்கள் மூதாதையர் பெயரிலோ பட்டா இல்லை. 2ம் தபசில் சொத்துக்களுக்கான பட்டா ஒரு திருவடிச்சாமி பெயரில் இருந்தது. தற்போது 3ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. மேற்படி திருவடிச்சாமி 3ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். திருவடிச்சாமி பெயரில் எத்தனை ஆண்டுகளாக பட்டா இருந்தது என்றால் எனக்குத் தெரியாது.

40, 50 ஆண்டுகளாக திருவடிச்சாமி பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்குத் தெரியாது. என் தகப்பனார் பெயர் இராஜேந்திரன், அவரது தகப்பனார் பெயர் கோவிந்தசாமி, அவரது தகப்பனார் பெயர் திருவடிச்சாமி. அந்த திருவடிச்சாமிக்கு ஒரு ஆண்பிள்ளை, மூன்று பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். அந்த ஆண்பிள்ளையின் பெயர் கோவிந்தசாமி. பெண்பிள்ளைகள் பெயர் சீனியம்மாள், காசியம்மாள், அழகம்மாள் என்றால் அழகம்மாள் பெயர் தெரியும். மற்ற இரண்டு பெண் பிள்ளைகள் பெயர் தெரியாது. (சீனியர்) திருவடிச்சாமியின் மகளின் மகன்தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்துக்கள் என் பாட்டனார் கோவிந்தசாமிக்கு 05.09.1957 தேதியிட்ட கிரைய பத்திரப்படி பாத்தியப்பட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 தான் அந்த கிரையப் பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ன் அடிப்படையில்தான் கோவிந்தசாமி 2ம் தபசில் மூன்று அயிட்ட சொத்துக்களையும் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 பாகபத்திரப்படி 1ம் தபசில் சொத்து கோவிந்தசாமிக்கு பாத்தியம். நான் கட்டிட பொறியாளர் பட்டம் பெற்றுள்ளேன். வா.சா.ஆ 1ல் 1ம் தபசில் சொத்து காட்டப்படவில்லை என்றால் அந்த எழுத்தை என்னால் படிக்க இயலாது. அதில் உள்ள எழுத்துக்கள் புரியவில்லை. வா.சா.ஆ 2ல் 2ம் தபசில் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. 1ம் தபசில் சொத்திற்கு என் தகப்பனார் பெயரிலோ, கோவிந்தசாமி பெயரிலோ பட்டா இருந்ததில்லை. அதற்கான பட்டா 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. 2021 லிருந்து 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்து வருகிறது. அதற்கு முன்பாக 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்து வந்தது. எத்தனை ஆண்டுகளாக இருந்தது என்றால் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி பெயரில் சுமார் 60 ஆண்டுகளாக பட்டா இருந்தது என்றால் எனக்குத்

தெரியாது. பொதுவாக வருவாய்த்துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளதா அவர் அனுபவத்தில்தான் சொத்து இருப்பதாக அனுமானிக்கப்பட வேண்டுமென்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்களை என் மூதாதையர் அனுபவித்ததாக காட்ட ஆவணமில்லை. வா.சா.ஆ 3 மற்றும் 4 கட்டுக்குத்தகை ஆவணம் மற்றும் கட்டுக்குத்தகை ரத்து ஆவணம் ஆகியவை இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இதுவரையில் பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கும், எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் விளம்புகை பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்துக்களில் எங்கள் உரிமையை முன்னிலைப்படுத்தக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.23 18:15:15 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.